## Sports Achievement Athletics:






**National Players:**

M. Priyadharshni, B.A.English - Discus throw

N. Hemamalini, B.A.English - Javelin throw

சாதனை படைத்தேன். துருக்கியில் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப், பகாமாசில் நடந்த காமன்வெல்த் இளையோர் தடகளப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டிருக்கிறேன். சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஏ.எல். முதலியார் தடகளப் போட்டியில் புதிய சாதனை (47.41 மீ.) புரிந்திருக்கிறேன். என் தடகளப் பயணத்துக்கு உறுதுணையாக உள்ள அப்பா உள்ளிட்டோர் பெருமைப் படும்படி, ஒலிம்பிக்கில் சாதிப்பேன்!"

## மேதா

"சென்னை மாடம்பாக்கத்தைச் சேர்ந்த நான், 'ஹாம்மர் த்ரோ' எனப்படும் சங்கிலிக்குண்டு எறிதல் வீராங்கனை. அப்பா மனோஜ் பி.எஸ்.என்.எல். ஊழியர், அம்மா சுசித்ரா இல்லத்தரசி. தாம்பரம் மெட்ராஸ் கிறிஸ்தவக் கல்லூரியில் அரசியல் அறிவியல் 2-ம் ஆண்டு பயில்கிறேன். கடந்த 2014-ம் ஆண்டு முதல் தடகளப் போட்டிகளில் பங்கேற்று வருகிறேன். ஆரம்பத்தில் நான் குண்டு எறிதலில் ஈடுபட்டேன். முதன்முதலாக மாநில அளவில் 14 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றேன். ஒன்பதாம் வகுப்பில் தடகளத்துக்கு வந்த நான், சுமார் 6 மாத காலத்தில் குண்டு எறிதலில் இருந்து சங்கிலிக்குண்டு எறிதலுக்கு மாறினேன். கடந்த 2017-ம் ஆண்டு ஐதராபாத்தில் நடந்த தேசிய இளையோர் தடகளப் போட்டியில் புதிய போட்டி சாதனையைப் படைத்தேன். மேலும் இரு போட்டி சாதனைகளும் புரிந்திருக்கிறேன். சங்கிலிக் குண்டு எறிதலில் 50 மீட்டர் தூரத்தைக் கடந்த முதல் தமிழக வீராங்கனை' என்ற பெருமையும் எனக்குச் சொந்தம். 18, 20 வயதுக்கு உட்பட்டோர் பிரிவுகளில் புதிய மாநில சாதனை புரிந்த இளவயது வீராங்கனையாக விளங்குகிறேன். ஆசிய இளையோர் தடகளப் போட்டியில் பங்கேற்று 5-ம் இடம் பெற்ற நான், இதுவரை 8 தேசியப் போட்டிகளில் கலந்துகொண்டு அவற்றில் 5-ல் பதக்கங்களை வசப்படுத்தியிருக்கிறேன். ஆசிய, ஒலிம்பிக் போட்டிகளிலும் சாதிக்க எண்ணுகிறேன்."


மேதா

## பிரியதர்ஷினி

"எனது சொந்த ஊர் திண்டுக்கல். அப்பா மொய்யப்பன் தனியார் பஸ் ஓட்டுநர், அம்மா இந்திரா ஆரம்ப சுகாதார நிலைய ஊழியை. தற்போது எஸ்.டி.என்.பி. வைணவக் கல்லூரியில் பி.ஏ. ஆங்கில இலக்கியம் 2-ம் ஆண்டு படிக்கிறேன். நான் எட்டாம் வகுப்பில் இருந்து வட்டு எறிதலில் ஈடுபட்டு வருகிறேன். இதில் தேசிய அளவில் ஜூனியர் பிரிவில் இரண்டாமிட வீராங்கனையாகத் திகழ்கிறேன். பதினோராம் வகுப்புக்குப் பின் இரண்டாண்டு கால இடைவெளியைத் தொடர்ந்து மீண்டும் போட்டிகளில் தீவிரமாகப் பங்கேற்று வருகிறேன். 8 தேசியப் போட்டிகளில் பங்கேற்று அவற்றில் 4-ல் சாதித்திருக்கிறேன். ஆந்திர மாநிலம் குண்டூரில் இந்த ஆண்டு நடைபெற்ற தேசிய ஜூனியர் தடகளப் போட்டியில் சிறப்பான செயல்பாடாக 43 மீ. தூரத்துக்கு எறிந்தேன். எட்டாம் வகுப்பு தொடங்கி தொடர்ந்து மாநில அளவிலான குடியரசு தினவிழா போட்டிகளில் முதலிடம் பெற்றிருக்கிறேன். தென்மண்டலப் போட்டியில் போட்டி சாதனையைச் சமன் செய்திருக்கிறேன். இந்தியாவுக்காக சர்வதேசப் போட்டியில் பதக்கம் வென்று கொடுக்க ஆசைப்படுகிறேன்."

இந்த 4 வீராங்கனைகளும், இவர்களின் வெற்றித்தடத்தைப் பின்பற்றிவரும் சக வீரர், வீராங்கனைகளும் ஒரே குரலில் கூறியது, தங்களை சாதனையாளர்களாகச் செதுக்கியது, பயிற்சியாளர் பெருமாள் ராமசாமி என்பது தான். இவரது பூர்வீகம் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள மணச்சை என்றாலும், பிறந்த ஊர் சிங்கப்பூர். திருச்சியில் படித்த இவர், அந்நாட்களில் கால்பந்து, தடகளம், மல்யுத்தம் என்று கலக்கியிருக்கிறார். சென்னை துறைமுக பொறுப்புக் கழகத்தில் பணிபுரிந்தவர், விளையாட்டு வீரர், வீராங்கனைகளை உருவாக்கும் ஆர்வத்தில் விருப்ப ஓய்வு பெற்றிருக்கிறார். விளையாட்டுப் பயிற்சியிலேயே தன்னைக் கரைத்துக் கொண்டிருக்கிறார். தற்போது 70 வயதாகும் பெருமாள் ராமசாமி, தனது 40 ஆண்டுகால பயிற்சி பயணத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச விளையாட்டு சாதனையாளர்களை உருவாக்கியிருக்கிறார். தொடர்ந்து உருவாக்கி வருகிறார். ஆனால் தன்னைப் பின்னிறுத்தி, தனது வீரர், வீராங்கனைகளை முன்னிறுத்துகிறார். தற்போது பெருமாள் ராமசாமியின் சிஷ்யர், சிஷ்யைகளே இணைந்து பெருமாள் ராமசாமி ஸ்போர்ட்ஸ் பவுண்டேஷனை குரோம்பேட்டையில் தொடங்கியிருக்கிறார்கள். அங்கு தானும் ஓர் இளைஞராக ஓடியாடிப் பயிற்சி அளித்துக்கொண்டிருக்கிறார் அவர்.


பிரியதர்ஷினி

"விளையாட்டே வாழ்க்கை என்று இருந்துவிட்ட நான், பல தேசிய, சர்வதேச வீரர், வீராங்கனைகளை உருவாக்கி விட்டேன். இந்தியாவுக்காக ஒலிம்பிக் வெற்றியாளரை உருவாக்குவதே எனது எஞ்சிய ஆசை!" என்கிறார் பெருமாள் ராமசாமி.

அவரது இளம் தடகளப் புயல்கள் அவருக்கு அந்த பெருமையைப் பெற்றுத் தருவார்கள்.

சாதனை

# வெற்றி வீராங்கனைகள்

மைதானத்தில் சாதாரணமாக பேசிச் சிரித்துக்கொண்டு பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் அந்த வீராங்கனைகள் சர்வதேச அளவில் தடம் பதித்தவர்கள் என்றால் நம்புவது கடினம்தான்.

சென்னை குரோம்பேட்டை சாலைப் போக்குவரத்து நிறுவன (ஐ.ஆர்.டி.) பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் தம்மைப் பட்டை தீட்டிக்கொண்டிருந்த காருண்யா, ஹேமமாலினி, மேதா, பிரியதர்ஷினி ஆகிய அந்த நால்வரின் பேட்டி...

## காருண்யா

"எனது சொந்த ஊர், மதுரை பனங்காடி. தற்போது சென்னை திருவல்லிக்கேணியில் பெற்றோருடன் வசிக்கிறேன். அப்பா முத்துராமலிங்கம் அகில இந்திய வானொலியில் பணிபுரிகிறார். அம்மா மரிய அருள் இந்தி ஆசிரியை. நான் நுங்கம்பாக்கம் எம்.ஓ.பி. வைணவக் கல்லூரியில் பி.எஸ்சி., உளவியல் நிறைவாண்டு பயில்கிறேன். நான் ஒரு வட்டு எறிதல் வீராங்கனை. தற்போது தேசிய அளவில் ஜூனியர் பிரிவில் முதலிடத்தையும், சீனியர் பிரிவில் நான்காம் இடத்தையும் பிடித்திருக்கிறேன். பத்தாம் வகுப்பு படிக்கும்போது, ஐதராபாத்தில் நடந்த தேசிய ஜூனியர் தடகளப் போட்டியில் முதல்முறையாகப் பங்கேற்று, வட்டு எறிதலில் வெண்கலப் பதக்கம் வென்றேன். தொடர்ந்து, தேசிய, சர்வதேச தடகளப் போட்டிகளில் பங்கேற்று பதக்க வேட்டையாடி வருகிறேன். தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் நடந்த ஆசிய ஜூனியர் தடகளப் போட்டி, ஜப்பானில் நடந்த ஆசிய இளையோர் தடகளப் போட்டி, பின்லாந்தில் நடந்த 20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்ஷிப் ஆகியவற்றில் பங்கேற்றிருக்கிறேன். இலங்கை தலைநகர் கொழும்புவில் நடைபெற்ற தெற்காசிய தடகளப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றிருக்கிறேன். வட்டு எறிதலில் நடப்பு மாநில ஜூனியர் பிரிவு சாதனை (48.48 மீ.) எனக்குச் சொந்தமாக இருக்கிறது. இந்தியாவுக்காக வருகிற 2024 ஒலிம்பிக்கில் பதக்கம் வென்று காட்டுவேன்!"



காருண்யா



பயிற்சியாளர் பெருமாள் ராமசாமியுடன் வீராங்கனைகள்...

## ஹேமமாலினி

"நான் ஈட்டி எறிதல் வீராங்கனை. வேலூர் மாவட்டம் ஒடுக்கத்தூர் அருகில் உள்ள மடையாபட்டு கிராமத்தைச் சேர்ந்தவள். பெற்றோர் நீலகண்டன்– அருணா விவசாயம் செய்கின்றனர். நான் தற்போது சென்னை குரோம்பேட்டை எஸ்.டி. என்.பி. வைணவக் கல்லூரியில் பி.ஏ. ஆங்கில இலக்கியம் இரண்டாமாண்டு பயில்கிறேன். ஒடுக்கத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போது தடகளத்துக்கு வந்தேன். நான் இது நாள் வரை, 13 தேசியப் போட்டிகளில் பங்கேற்றிருக்கிறேன். அவற்றில் 10 போட்டிகளில் பதக்கங்களைக் கைப்பற்றியிருக்கிறேன். ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் நடைபெற்ற தேசிய தடகளப் போட்டியில் 16 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் புதிய தேசிய



ஹேமமாலினி